அளவிற்கு அந்த மருத்துவமனையில் வசதிகள் இல்லை. அந்தத் தாலுகா Headquarters*–ல் 24 மணி நேரமும் இயங்கும் மருத்துவமனை நிச்சயமாக இருக்க வேண்டும். அதனால் தாலுகா அளவில் அந்தக் கிராம மற்றும் நகரப் பகுதி மக்கள் நன்கு சுகாதாரமாக இருப்பதற்கு, 24 மணிநேரமும் செயல்படுகின்ற 60 படுக்கை வசதிகள்கொண்ட மருத்துவமனையாக தாலுகா மருத்துவமனையைத் தரம் உயர்த்த வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கெல்லாம் வருவாய்த் துறை சார்பில் தாலுகாக்கள் உருவாக்கப்படுகின்றனவோ, அங்கெல்லாம் இருக்கக்கூடிய மருத்துவமனைகள் தாலுகா மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்படவேண்டும் என்பதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் கொள்கை. அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு கனிவோடு ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 97, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

97—

வட்டாட்சியர் அலுவலகம்

***24886—திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2019 ஜூலை 12]

(அ) குறிஞ்சிப்பாடி தொகுதி, குறிஞ்சிப்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றம் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கடலூர் வட்டத்தைச் சீரமைத்து குறிஞ்சிப்பாடியைத் தலைமையிடமாகக் கொண்டு தனி வட்டம் அறிவிக்கப்பட்டு, புதிதாக குறிஞ்சிப்பாடி வட்டம் உருவாக்கப்பட்டு, வட்டாட்சியர் அலுவலகம் குறிஞ்சிப்பாடி நகரத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வந்தது. பொது மக்கள் வசதிக்காகவும், இட வசதியைக் கருத்தில்கொண்டும் தீவிர ஆய்வுக்குப் பின்னால் குறிஞ்சிப்பாடி நகரத்திலிருந்து 1 கி.மீ. தொலைவில் கடலூர்–விருத்தாசலம் தேசிய நெடுஞ்சாலையிலிருந்து சுமார் 200 மீட்டர் தொலைவில் மற்றும் குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றிய அலுவலகப் பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 900 மீட்டர் தொலைவில், குறிஞ்சிப்பாடி பேருந்து நிலையத்திலிருந்து சுமார் 2 கி.மீ. தொலைவில் உள்ள ராசாக்குப்பம் என்கிற கிராமத்தில் 2 கோடியே 2 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு, அந்தக் கட்டடத்திற்குக் குறிஞ்சிப்பாடி வட்டாட்சியர் அலுவலகம் மாற்றப்பட்டு, 2–6–2015 முதல் சிறப்பாகச் செயல்பட்டு வருவதால் குறிஞ்சிப்பாடி வட்டாட்சியர் அலுவலகத்தை வேறு இடத்திற்கு மாற்றம் செய்யும் வினா எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்.*

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிஞ்சிப்பாடியில் புதிய தாலுகா அலுவலகம் 2009 ஆம் ஆண்டு தலைவர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்டு, துவக்கப்பட்டது. நாங்கள் நகரத்தினுடைய மையத்தில் ஓர் இடத்தைத் தேர்வு செய்திருந்த நேரத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. நாங்கள் தேர்வு செய்த இடத்தில் வட்டாட்சியர் அலுவலகத்தைக் கட்டாமல் பேருந்து நிலையத்திலிருந்து கிட்டத்தட்ட 3 கி.மீ.*

தொலைவில் உள்ள பகுதியில், மக்கள் செல்லத் தகுதியில்லாத இடத்தில் கட்டப்பட்டுள்ளது. கடந்த 2–3 ஆண்டுகளுக்கு முன்பு புயல், வெள்ளம் வந்தபோது மக்களுக்கு உதவி செய்கின்ற வட்டாட்சியர்கள், வட்டாட்சி அலுவலர்கள் ஆகியோருக்கு மக்கள் உதவி செய்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. அந்தக் கட்டடம் தாழ்வான இடத்தில் கட்டப்பட்டுள்ளது. இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 900 மீட்டர் தூரத்தில் இருக்கிறது என்று technical ஆகச் சொல்கின்றார், அந்த இடம் 1 கி.மீ. தாண்டி, தனித்து இருக்கின்ற பகுதி. பகல் நேரத்தில் செல்லக்கூட அஞ்சக்கூடிய ஓர் இடமாக, தாழ்வாக உள்ள பகுதி. நெய்வேலியிலிருந்து வரும் தண்ணீர் வடிகால் அங்கே இருக்கின்றது. அந்த இடத்தில் போக்குவரத்து இல்லை. இன்னும் சொல்லப்போனால், அந்த அலுவலகம் கடலூரிலே இருந்திருக்கலாம். மக்கள் கடலூருக்கே பஸ் ஏறி வட்டாட்சியர் அலுவலகம் சென்று வந்துவிடுவார்கள். இப்போது பேருந்து நிலையத்திலிருந்து அந்த அலுவலகத்திற்கு வருவதென்றால் கிட்டத்தட்ட 3 கி.மீ. தூரத்திற்கு தனித்து ஆட்டோவில் செல்ல வேண்டும். அங்கே செல்ல பஸ் வசதியும் கிடையாது. சைக்கிளிலோ, காரிலோ அல்லது பைக்கிலோதான் செல்ல வேண்டும். ஆகவே, பொது மக்கள் எளிதாகச் சென்று அந்த அலுவலகத்தைப் பயன்படுத்த முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினால், நகரத்தின் மையத்தில் உள்ள குறிஞ்சிப்பாடிக்கு அந்த அலுவலகத்தை மாற்ற வேண்டும் என்ற ஒரு கோரிக்கை மக்கள் மத்தியில் இருக்கின்றது. மக்களுக்காகப் பாடுபடுகின்ற ஓர் அரசாக இருக்க வேண்டும். அந்த இடத்தில் கட்டியிருக்கக்கூடிய கட்டடம் பற்றி அமைச்சர் அவர்களுக்கும் தெரியும், அந்த மாவட்ட அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். நீங்கள் தாலுகா அலுவலகத்தில் நிவாரண உதவி கொடுக்க வேண்டும். அந்தப் பகுதியில் புயல், வெள்ளம் வந்தால் தாலுகா அலுவலகத்தில் வெள்ள நிவாரணம் கொடுத்தாக வேண்டும். அந்த இடத்தில் ஒரு compound கிடையாது. அது ஒரு பாதுகாப்பான பகுதியும் கிடையாது. ஒரு பள்ளத்தாக்கில் கட்டப்பட்டிருக்கின்ற அந்தக் கட்டடத்தை மாற்றி, குறிஞ்சிப்பாடி நகரப் பகுதியின் மையத்தில் கட்டடம் கட்டுவதற்கு ஆவன செய்யப்படுமா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

2019 ஜூலை 12]

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிஞ்சிப்பாடி புதியதாக உருவாக்கப்பட்டபோது வட்டாட்சியர் அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கியது. அதன்பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சராக இருந்தபோது அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்கு இரண்டு இடங்களை ஆய்வு செய்தார்கள். வருவாய்த் துறை மற்றும் மாவட்ட நிருவாகத்தின் சார்பில் ஆய்வு செய்தபோது தனியார் கோயிலான சுப்பிரமணியசுவாமி கோயிலுக்குச் சொந்தமான நிலமாக இருந்த காரணத்தினாலும், அதன்மீது ஆட்சேபணை இருந்த காரணத்தினாலும், அதேபோல் அதற்குப் பக்கத்தில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் மற்றும் இலங்கை அகதிகள் முகாம் செயல்பட்டு வந்த காரணத்தினாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அமைச்சராக இருந்தபோது அந்த இடத்தில் கட்டடம் கட்ட இயலாத சூழ்நிலை ஏற்பட்டது. ஆனாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது மக்கள் எளிதில் அணுக முடியாத இடத்தில் வட்டாட்சியர் அலுவலகம் இருக்கிறது என்று எங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கின்றார்கள். இப்போது 2019. 2015–லிருந்து அந்த வட்டாட்சியர் அலுவலகம் அங்கே செயல்பட்டுக் கொண்டிருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அறிவார்கள். இருந்தாலும் மாவட்ட நிருவாகத்திற்கு இதுகுறித்து தெரிவித்து, மறு ஆய்வு செய்வதற்கு சாத்தியக்கூறுகள் இருக்கிறதா, அதை வேறு இடத்திற்கு மாற்றலாமா, மக்கள் எளிதில் அணுகக்கூடிய இடத்திலேதான் அது அமைந்திருக்கிறதா என்பதை மறு ஆய்வு செய்வதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்கு எடுத்துச்சென்று, மாவட்ட நிருவாகத்திற்கு உரிய அறிவுரைகள் வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறு ஆய்வு என்பதெல்லாம் பதில் சொல்வதற்குத்தான். எல்லோரும் தற்காலிகமாகத் தப்பிப்பதற்காக இந்தப் பதிலைச் சொல்கிறீர்கள். ‘முடிவு எடுப்போம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசுவோம்,

மறு ஆய்வு செய்வோம்' என்ற பதிலெல்லாம் இந்த நேரத்திற்கு அளிக்கப்படுகிற பதில். மக்களுடைய பயன்பாட்டிற்குப் பாதுகாப்பான ஓர் இடத்தைத் தேர்வு செய்து, நிரந்தரமான கட்டடம் கட்ட வேண்டும். அதற்கு இடம் இருக்கிறது. அந்தக் கிராமத்தில் இருக்கக்கூடிய மக்கள், இடம் தருவதாக வாக்குறுதி அளித்திருக்கிறார்கள். அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அந்த இடத்தின் மதிப்பு இரண்டு கோடி ரூபாய்தான். பல இலட்சம் ரூபாய் கடன் இந்த அரசுக்கு இருக்கும்போது, ரூபாய் இரண்டு கோடி என்பது பெரிய தொகை அல்ல. ரூபாய் இரண்டு கோடியில் எளிதாகக் கட்டடம் கட்டலாம். மாவட்டத்தினுடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே சென்று பார்த்தால் தெரியும். ஏனென்றால் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் தனித்த காட்டில் அது இருக்கிறது; பள்ளத்தாக்கில் இருக்கிறது. ஆகவே, அதனை மாற்றிக் கட்டுவதற்குண்டான ஆணையை வழங்க வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, அங்கே தாலுகா அலுவலகம் ஆரம்பித்ததிலிருந்து மற்ற அதிகாரிகள் எல்லாம் இருக்கிறார்கள். Special Tahsildar (SSS) பணியிடம் இல்லை. அதேபோல, பெரும்பாலான கிராமங்களில் கிராம நிருவாக அலுவலர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. அந்த இடங்களில் தற்காலிகமாக, ஓய்வு பெற்ற கிராம நிருவாக அலுவலர்களைத் தொகுப்பூதியத்தில் நியமனம் செய்வதாக அரசு அறிவித்திருக்கிறது. அதற்கு தற்போது பணியாற்றிக் கொண்டிருக்கின்ற கிராம நிருவாக அலுவலர்கள் எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றார்கள். இது குறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது? அதேபோல, கிராமத்திலுள்ள தலையாரிகள், அதிகம் படித்தவர்களாக இருக்கின்றார்கள். அவர்களுக்கு பதவி உயர்வு கொடுத்து, அவர்களை கிராம நிருவாக அலுவலர்களாக அமர்த்தலாமா என்ற வினாவையும், அதேபோல தமிழகத்தில் எத்தனை கிராம நிருவாக அலுவலர் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் ஓர் அமைச்சராக இருந்தவர். மறு ஆய்வு செய்ய உடனே உத்தரவிட வேண்டும் என்று சொல்கின்றார்கள். 2009–ல் அவர்களுடைய ஆட்சிக்

2019 ஜூலை 12]

காலத்தில்தான், குறிஞ்சிப்பாடி தனி வட்டமாக உருவாக்கப்பட்டது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். 2011 வரை அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே அது வாடகைக் கட்டடத்திலேதான் இயங்கியது. மாண்புமிகு அம்மாவினுடைய அரசிலேதான், அதற்கு உடனடியாகக் கட்டடம் கட்ட வேண்டும் என்று தகுந்த இடத்தைத் தேர்வு செய்து, கட்டடம் கட்டப்பட்டது. தற்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பொது மக்கள் எளிதில் அணுக முடியாத ஒரு சூழ்நிலை இருப்பதாக இந்த மன்றத்திற்கு எடுத்துரைத்திருக்கின்றார்கள். எனவே, அதை ஆய்வு செய்துதான் உத்தரவிட முடியுமே தவிர, உடனடியாக உத்தரவிட முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், முன்னாள் அமைச்சராக இருந்தவர். அவர்களுக்கு நன்றாகத் தெரியும், ஏற்கெனவே 2015 லிருந்து தற்போது வரை, கடந்த 4 ஆண்டுகளாக அந்தக் கட்டடத்தில்தான் வட்டாட்சியர் அலுவலகம் செயல்பட்டுக் கொண்டு வருகிறது. மக்கள் அங்கே சென்று, வருவாய்த் துறையின் மூலமாக அரசின் நலத் திட்ட உதவிகளைப் பெற்று வருகிறார்கள். இருந்தபோதிலும், கடலூர் மாவட்டம் எப்போதும் வெள்ளத்தினால் பாதிக்கப்படக்கூடிய ஒரு மாவட்டம். அந்த அடிப்படையிலே வெள்ளம் சூழ்கிற காலங்களிலே, பேரிடர் காலங்களிலே மக்கள் அணுக முடியாத ஒரு சூழ்நிலை இருப்பதை சிறப்புக் கவனத்திலே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். எனவே, அதை மறு ஆய்வு செய்வோம் என்பதைத்தான் சொன்னேன்.

அதேபோல கிராம நிருவாக அலுவலர் காலிப் பணியிடங்களைப் பற்றிச் சொன்னார்கள். பொதுவாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாகத்தான் கிராம நிருவாக அலுவலர்கள் நியமனம் செய்யப்படுகிறார்கள். அப்படி நியமனம் செய்யப்படுகிறபோது, மொத்தமாக–consolidated ஆக அந்த நியமனங்களைச் செய்வதற்கு கால அவகாசம் தேவைப்படுகிறது. அந்தக் கால அவகாசத்திலே, காலிப் பணியிடங்கள் இருக்கக் கூடாது என்பதற்காகத்தான் ஓய்வு பெற்ற, தகுதி வாய்ந்த 1000 கிராம நிருவாக அலுவலர்களை 15,000/– ரூபாய் தொகுப்பூதியத்தில் ஓராண்டுக்குத் தற்காலிகமாக நியமனம் செய்யலாம் என ஓர் அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த வகையிலே தகுதியுள்ளவர்கள் தேர்வு செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரே, மாவட்ட நிருவாகத்திலே அவர்களைத் தேர்வு செய்து, நியமனம் செய்வார்கள்.

[*2019 ஜூலை 12*

முற்பகல் 10—50

அதேபோல, கிராம உதவியாளர்களை, கிராம நிருவாக அலுவலர்களாகப் பதவி உயர்வு செய்யலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான், ஒருவர் பணியில் சேர்ந்த காலம் முதல் அவர் ஓய்வு பெறுகிற வரை, பதவி உயர்வே இல்லாமல் ஆயுள் முழுவதும் கிராம உதவியாளராக மட்டுமே இருக்கக் கூடாது என்பதைக் கருத்தில்கொண்டு, பணியில் அவர்களுக்கு ஊக்கமும், ஆக்கமும், உற்சாகமும் கொடுக்க வேண்டுமென்பதன் அடிப்படையிலே, கிராம உதவியாளர்களை முதன்முதலாக கிராம நிருவாக அலுவலர்களாக நியமிக்கலாம் என்கிற அரசாணையை வெளியிட்டது. அதனை வெளியிட்டவர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாக அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அவர்களை நாம் முழுமையாக பணி நியமனம் செய்துவிட முடியாது. Percentage *அடிப்படையில், அவர்களுள் தேவையான கல்வித் தகுதி உள்ளவர்களைத் தேர்வு செய்து, நியமனம் செய்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையையேற்று, கூடுதலான சதவிகிதத்தில் அவர்களை நியமனம் செய்வதற்கும் வழிவகைகள் ஆய்வு செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.கே. சேகர்பாபு அவர்கள்.*

திரு. பி.கே. சேகர்பாபு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டாட்சியர் அலுவலகங்களைப் பொறுத்த வரையில் எங்கெங்கெல்லாம் புதிய கட்டடங்கள் கட்டப்படுகின்றனவோ அங்கே அந்த அலுவலகங்களை மாற்றி விடுகிறார்கள். கொளத்தூர் பகுதியிலே ஏற்கெனவே இருந்த வட்டாட்சியர் அலுவலகம் தற்போது அண்ணா நகர் பகுதிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 4, 5 கிலோ மீட்டர் தொலைவில் அந்த அலுவலகம் தற்போது இருக்கிறது. இது குறித்து ஏற்கெனவே வருவாய்த் துறை ஆணையரிடத்திலும், சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் அவர்களிடத்திலும் கோரிக்கை வைத்திருக்கிறோம். கொளத்தூர்*

2019 ஜூலை 12]

தொகுதியில் பல்வேறு அரசுக் கட்டடங்கள் பல்வேறு இடங்களில் இருப்பதால், சட்டமன்ற உறுப்பினர் அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து நிதி தேவையென்றாலும், தேவைப்படும் நிதியினை ஒதுக்கீடு செய்ய தயாராக இருக்கிறார்கள். ஆகவே, கொளத்தூர் தொகுதிக்குட்பட்ட மக்களுக்கு, அப்பகுதியின் வட்டாட்சியர் அலுவலகம் சம்பந்தப்பட்ட அனைத்து அலுவல்களும் சுமூகமாக, சுலபமாக நடைபெறுவதற்கு அந்தத் தொகுதியிலேயே வட்டாட்சியர் அலுவலகத்தை மாற்றித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வர வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கோரிக்கை வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தத் தொகுதியிலேயே அந்த வட்டாட்சியர் அலுவலகம் இருந்தால் மக்கள் எளிதாக அணுக முடியும் என்கிற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். பொதுவாக ஒரு புதிய வட்டம் உருவாக்கப்படுகிறபோது, தற்காலிகமாக, உடனடியாக அங்குள்ள அரசுக் கட்டடங்களைப் பயன்படுத்துகிறோம். ஆனால், நிரந்தரக் கட்டடங்கள் உருவாக்கப்படும்போது, மக்கள் எளிதில் அணுகக்கூடிய வகையிலேதான் அந்த* jurisdiction, *அந்த எல்லைக்குள் வருகிற மாதிரிதான் ஆய்வு செய்யப்பட்டு, அந்தப் பகுதியில் வட்டாட்சியர் அலுவலகம் அமைக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்களுக்கு நன்றாகத் தெரியும். நகர்ப்புறப் பகுதிகளைப் பொறுத்தளவில், அரசுக் கட்டடங்களைக் கட்டுவதற்குத் தேவையான இடம் கிடைப்பது பெரிய சவாலாக இருக்கிறது. ஆகவேதான், இடம் கிடைக்கின்ற பகுதிகளிலே, மக்கள் எளிதாக அணுகுகிற வகையிலே, அந்தக் கட்டடங்கள் அமைக்கப்படுகின்றன. பொதுவாக, வருவாய்த் துறையின்மூலம் வழங்கப்படும் அரசின் நலத் திட்டங்களை மக்கள் பெறுவதற்காக புதிய வட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. நான் இதனை இந்த அரசின் சாதனையாகச் சொல்லவில்லை, பெருமையாகச் சொல்கிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசிலேதான், 85 வட்டங்கள் புதிதாக உருவாக்கப்பட்டு, ஒரு புதிய சரித்திர சாதனை வருவாய்த் துறையிலே உருவாக்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும்*

ஒலி) அதற்குத் தேவையான கட்டடங்களையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதன் அடிப்படையில், அந்தக் கட்டடம் தற்காலிகக் கட்டடமாக இருந்தால், நிரந்தரக் கட்டடத்திற்கு மாற்றுவதற்கும், அந்தப் பகுதி தூரமாக இருந்தால், மக்கள் எளிதாக அணுகுகின்ற வகையில் தொகுதியிலே அமைப்பது குறித்தும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 98, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

98—

சுற்றுலாத் தலம்

***43439—திரு. பி.வி. பாரதி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, கொடியம்பாளையம் கடற்கரைத் தீவு கிராமத்தைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. வெல்லமண்டி ந. நடராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள், சீர்காழி தொகுதி, கொடியம்பாளையம் கடற்கரைத் தீவு கிராமத்தைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு முன்வருமா என்று வினவியிருக்கின்றார்கள். சுற்றுலாத் துறை எந்தவொரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பது இல்லை. இருப்பினும், அத்தலத்திற்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்தில்கொண்டு, அதனடிப்படையில் அந்தப் பகுதிக்குத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் அணுகு சாலைகளைச் செவ்வனே ஏற்படுத்தி, செய்து வருகின்றது. அந்த வகையிலே, நாகப்பட்டினம் மாவட்டம், கொடியம்பாளையம், சீர்காழியிலிருந்து 36 கிலோ மீட்டர் தொலைவில் வங்காள